# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல்

**கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களின் தொழிலைக் கொண்டு நடாத்துதலை ஒழுங்குபடுத்துவதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டமூலம்**

---

துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்களால்
2026 சனவரி மாதம் 20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2025 திசெம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

**[49 ஆம் சட்டமூலம்]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 72.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

# கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல்

ச.வ.- ஓ 58/2023

**கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களின் தொழிலைக் கொண்டுநடாத்துதலை ஒழுங்குபடுத்துவதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல்

கொள்கல நிலையத் தொழிற்படுத்து நர்களுக்கு உரிமமளித்தல்

**2.** (1) (இச்சட்டத்தில் “பணிப்பாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட ஒரு வலிதான உரிமத்தின் அதிகாரத்தின்கீழ் தவிர, ஆளொருவர், கொள்கல நிலையத் தொழிற்படுத்துநரின் தொழிலொன்றைத் தொழிற்படுத்துதலோ, அதில் ஈடுபடுதலோ அல்லது அதனைக் கொண்டுநடாத்துதலோ ஆகாது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, கொள்கல நிலையத் தொழிற்படுத்துநரின் தொழில் தொடர்பிலான உரிம மொன்றை வழங்குவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழான அவரது அதிகாரத்தை எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிப்பதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

PL 15627 - 172 (2026/01)

கொள்கல நிலையத் தொழிற்படுத்துநரின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமத்தை வழங்குதல்

**3.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு கொள்கல நிலையத் தொழிற்படுத்துநரின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்ற ஆளொருவர், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியாகவிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்று, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் உரிமமொன்றின் வழங்குகைக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சமர்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தேவைப்பட்ட எல்லா விபரங்களும் பற்றிய பூரணமான மற்றும் செம்மையான தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில் அடங்கியுள்ள தகவல்களையும் விபரங்களையும் கவனத்துட் கொண்டும், உரிமமொன்று வழங்கப்படுவதற்கு விதித்துரைக் கப்படக்கூடியவாறாகப் தகைமைகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளவிடத்தும், விண்ணப்பகாரருக்கு அத்தகைய உரிமத்தை வழங்குதல் வேண்டும்.

(5) பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது பிழையான தகவல்களை அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதாகக் காணப்படும் விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

ஓர் உரிமத்தின் படிவமும் கால எல்லையும்

**4.** (1) மூன்றாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று –

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக் கக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்;

(ஆ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கு அமைய விருத்தல் வேண்டும்;

(இ) உரிமத்தில் குறித்துரைக்கப்படவேண்டிய வாறான அத்தகைய தேதியிலிருந்து நடை முறைக்கு வருதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) முன்னதாக இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்காக வலுவிலிருத்தல் வேண்டும்.

(2) சம்பந்தப்பட்ட உரிமம்பெற்றவருக்கு நட்டஈடளிக்காமல் ஓர் உரிமத்தின் நியதிநிபந்தனைகளைத் திரிபுபடுத்துவது பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான எந்த திரிபுபடுத்துதலும், அத்தகைய திரிபுபடுத்துதல் ஏன் செய்யப்படுதலாகாது என அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் காரணங்காட்டுவதற்கு எழுத்தில் உரிமம் பெற்றவருக்கு அறிவித்த பின்னர் அன்றியும், அத்துடன் அத்தகைய காலப்பகுதியினுள் காரணங்காட்டுவதற்கு உரிமம் பெற்றவரின் தவறுகையின் மீதன்றியும் அல்லது போதுமான காரணம் உரிமம் பெற்றவர் காட்டாமையின் மீதன்றியும் செய்யப்படுதலாகாது.

உரிமத்தின் கைமாற்றுகை மீதான மட்டுப்பாடு

**5.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றும் அத்தகைய உரிமத்தின்கீழான எவையேனும் உரிமைகளும், நன்மைகளும் அல்லது சிறப்புரிமைகளும் வேறெவரேனுமாளுக்குக் கைமாற்றத்தக்கதாகவிருத்தலோ அல்லது குறித்தளிக்கப்படற்பாலதாகவிருத்தலோ ஆகாது என்பதுடன் வேறெவரேனுமாளின் நன்மைக்காகப் பயன் படுத்தப்படுதலுமாகாது.

ஓர் உரிமத்தைப் புதுப்பித்தல்

**6.** (1) மூன்றாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிம மொன்று, முன்னர் வழங்கப்பட்ட உரிமம் முடிவுறும் தேதிக்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் விதித் துரைக்கப்பட்ட புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்தில் அந் நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுவதன் மீது புதுப்பிக் கப்படலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெறுவதன்மீது உரிமமொன்றைப் புதுப்பித்தல் வேண்டும் -

(அ) உரிமம்பெற்றவர், வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிநிபந்தனைகளை மீறியிராதவிடத்து அல்லது அவற்றுக்கு முரணாக எதனையும் செய்திராதவிடத்து;

(ஆ) உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறியிராத விடத்து; அல்லது

(இ) சம்பந்தப்பட்ட கொள்கலத் தொழிற்பாட்டைத் தொடருதல் பொதுமக்களின்மீது ஏதேனும் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்க மாட்டாது என்றவிடத்து.

(3) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழ் புதுப்பித்தலின்மீது வழங்கப்பட்ட உரிம மொன்று தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

உரிமமொன்றை இடைநிறுத்துதல்

**7.** (1) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, பின்வருமிடத்து, பணிப்பாளர் தலைமை யதிபதியினால் இடைநிறுத்தப்படலாம் -

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட தீர்மானமொன்றின் விளைவாகக் கடைப்பிடிக்கப்பட்ட எவையேனும் பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைப் படுத்துவதற்கென அது அவசியமாக வருமிடத்து;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம்பெற்றவர் தவறொன்றைப் புரிந்தமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்குமிடத்து; அல்லது

(இ) உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் எவையேனும் ஏற்பாடுகளை மீறியுள்ள விடத்தும் அத்தகைய மீறுகையின் பாரதூரமானதன்மை உரிமத்தின் இல்லா தாக்குகையை அனுமதிக்காதவிடத்தும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் உரிமமொன்று இடைநிறுத்தப்படுமிடத்து, உரிமம்பெற்றவர், உரிமத்தின் வழங்குகைக்காக அவரினாற் செலுத்தப்பட்ட கட்டணத்தின் தகவுக்கேற்ப மீள்கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான எந்த இடைநிறுத்துதலும், அத்தகைய இடைநிறுத்துதல் ஏன் செய்யப்படுதலாகாது என அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் காரணங்காட்டுவதற்கு எழுத்தில் உரிமம் பெற்றவருக்கு அறிவித்த பின்னர் அன்றியும், அத்துடன் அத்தகைய காலப்பகுதியினுள் காரணங்காட்டுவதற்கு உரிமம் பெற்றவரின் தவறுகையின் மீதன்றியும் அல்லது போதுமான காரணம் உரிமம் பெற்றவர் காட்டாமையின் மீதன்றியும் நிறைவேற்றப்படுதலாகாது.

உரிமமொன்றை இல்லாதாக்குதல்

**8**. (1) மூன்றாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, பின்வருமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்படுதல் வேண்டும் –

(அ) பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது செம்மையற்ற தகவல்களை வழங்குவதன் மூலம் உரிமமானது பெற்றுக்கொள்ளப் பட்டிருந்ததெனக் காணப்படுமிடத்து;

(ஆ) உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின் ஏற்பாடு களின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்ப ளிக்கப்பட்டுள்ளவிடத்து;

(இ) உரிமம்பெற்றவர், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ளவிடத்து;

(ஈ) அத்தகைய உரிமம் எந்த நியதிநிபந்தனை களுக்கமைய வழங்கப்பட்டதோ உரிமம் பெற்றவர் அந்த நியதிநிபந்தனைகளுக்கு முரணாக அல்லது அவற்றை மீறிச் செயலாற்றியுள்ளவிடத்து; அல்லது

(உ) கொள்கலத் தொழிற்பாட்டைத் தொடர்தல் பொதுமக்கள்மீது பாதகமான தாக்கத்தைக் கொண்டதாகவிருக்கக்கூடியவிடத்து.

(2) வழங்கப்பட்ட உரிமமொன்று, விடயத்துக்கேற்ப 7 ஆம் பிரிவின்கீழ் இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது இப்பிரிவின்கீழ் இல்லாதாக்கப்படுமிடத்து, உரிமம் பெற்ற வரினால் கொடுக்கப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சலின்கீழ் அனுப்பப்பட்ட எழுத்திலானவொரு தொடர்பாடலின்மூலம் அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகைபற்றி உரிமம்பெற்றவருக்கு உடனடியாக அறிவித்தல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான எந்த இல்லாதாக்குதலும், அத்தகைய இல்லாதாக்குதல் ஏன் செய்யப்படுதலாகாது என அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் காரணங்காட்டுவதற்கு எழுத்தில் உரிமம் பெற்றவருக்கு அறிவித்த பின்னர் அன்றியும், அத்துடன் அத்தகைய காலப்பகுதியினுள் காரணங்காட்டுவதற்கு உரிமம் பெற்றவரின் தவறுகையின் மீதன்றியும் அல்லது போதுமான காரணம் உரிமம் பெற்றவர் காட்டாமையின் மீதன்றியும் நிறைவேற்றப்படுதலாகாது.

(4) ஏழாம் பிரிவின்கீழ் அல்லது இப்பிரிவின்கீழ் உரிமமொன்று இடைநிறுத்தப்பட்டமை அல்லது இல்லாதாக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், எந்தக் கொள்கல நிலையத் தொழிற்பாட்டாளரின் உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ளதோ அந்தக் கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர், அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகைத் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களினுள் அதன் வாடிக்கையாளர்களுக்கு ஏலவேயுள்ள கடல்சார் கொள்கலன்களைத் தொடர்ந்தும் விடுவிக்கலாம்.

காரணங்கள் அறிவிக்கப்படுதல் வேண்டும்

9. விடயத்துக்கேற்ப, 3 ஆம் பிரிவின்கீழ் அல்லது 6 ஆம் பிரிவின்கீழ் ஓர் உரிமத்தின் வழக்குகைக்கான அல்லது அதன் புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பதியப்படுதல் வேண்டும். விண்ணப்பத்திற் காணப்படுகின்ற முகவரிக்குப் பதிவஞ்சலின்கீழ் அனுப்பப்பட்ட எழுத்திலான தொடர்பாடலொன்றின்மூலம் அத்தகைய மறுப்புக்கான காரணங்களை அத்தகைய விண்ணப்பம் செய்கின்ற ஆளுக்கு அறிவித்தல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

மேன்முறையீடுகள்

10. (1) விடயத்துக்கேற்ப, உரிமமொன்றின் வழங்குகையை அல்லது புதிப்பித்தலை மறுக்கின்ற முடிபொன்றினால் அல்லது வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் இடைநிறுத்துகையினால் அல்லது இல்லாதாக்குகையினால்

இன்னலுறும் எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, அம்மறுப்பு அல்லது இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகைபற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீதான முடிபு, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டைச் செய்கின்ற ஆளுக்கு அதன்மீது செய்யப்பட்ட முடிபுபற்றி உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் தோதானதெனக் கருதுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப் பட்ட ஏதேனும் மேன்முறையீட்டைச் செய்யுமுன்னர், விடயத்தின் சூழ்நிலைகளில் அவசியமென அவர் கருதுகின்ற வாறான அத்தகைய விசாரணையை அவர் நடாத்தலாம்.

## பாகம் II

## பொதுவான ஏற்பாடுகள்

கொள்கல நிலையங்களைப் பதிவுசெய்தல்

**11.** (1) ஆளொருவர், பணிப்பாளர் தலைமையதிபதியுடன் பதிவுசெய்யப்படாமல் ஏதேனும் வகையினதான கடல்சார் கொள்கலத்தின் களஞ்சியப்படுத்துகையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக ஏதேனுமிடத்தை அந்நோக்கத்துக்காகப் பயன்படுத்துதலாகாது.

(2) ஏதேனும் வகையினதான கடல்சார் கொள் கலத்தின் களஞ்சிப்படுத்துகையை உறுதிப்படுத்துவதற்காக ஏதேனுமிடத்தைப் பதிவுசெய்வதற்கு உட்கருதுகின்ற ஆளொருவர், அந்நோக்கத்துக்காக விதித்துரைக்கப்படக் கூடியவாறான படிவமொன்றில் பணிப்பாளர் தலைமை யதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) விண்ணப்பமொன்று பெறப்பட்டதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில் அடங்கியுள்ள தகவல்களையும் விபரங்களையும் கவனத்துட்கொண்டும், பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்கான பொருத்தமாந்தன்மை தொடர்பில் 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் விதித்துரைக் கப்பட்டவாறான தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளவிடத்தும், அத்தகைய பதிவுச் சான்றிதழை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

வீதிவரிகளும் விதிப்பனவுகளும்

**12.** (1) அமைச்சர், அளிக்கப்பட்ட சேவைகளுக்காக உரிமம்பெற்ற கொள்கல நிலையத் தொழிற்படுத்துந ரொருவரினால் விதிக்கப்படவேண்டிய அத்தகைய வீதவரி களையும் விதிப்பனவுகளையும் விதித்துரைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அத்தகைய வீதவரிகளையும் விதிப்பனவுகளையும் தீர்மானிப்பதில், அமைச்சர் பின்வரு வனவற்றை கருத்திற்கெடுக்கலாம் –

(அ) அத்தகைய வீதவரிகளையும் விதிப்பனவு களையும் சேவை வழங்குவதில் உறப்படும் ஆகுசெலவுகளின் மீளப்பெறுகைக்காக அனுமதிக்கின்ற மட்டமொன்றில் அமைக்கலாம்;

(ஆ) வீதவரிகளும் விதிப்பனவுகளும் 3 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பெனி களுக்கும் சேவையைப் பெறுகின்ற ஆட்களுக்கும் முறையற்ற நிதிசார் கஸ்டங்களை உருவாக்கமாட்டாது என உறுதிப்படுத்துகின்ற சேவையின் இயலுமாந் தன்மைக்கு கருத்திற்கெடுப்பு தரப்படலாம்;

(இ) அத்தகைய வீதவரிகளும் விதிப்பனவுகளும் பயன்படுத்துநர்களின் வேறுபட்ட வகை களுக்கு வழங்கப்படும் சேவையின்

பெறுமதிக்கு நியாயமானதாகவும் பிரதிபலிப்ப தாகவும் இருத்தல் வேண்டும்;

(ஈ) அத்தகைய வீதவரிகளையும் விதிப்பனவு களையும் தீர்மானிப்பதற்கான செயன்முறை எவ்வாறு அத்தகைய வீதவரிகளும் விதிப்பனவுகளும் கணிப்பிடப்படுகின்றன என்பது பற்றி 3 ஆம் பிரிவின் கீழ் உரிம மளிக்கப்பட்ட கம்பெனிகளுக்கும் சேவையைப் பெறுகின்ற ஆட்களுக்குமான அறிவுரை மற்றும் தெளிவான தொடர்பாடலுக்கான வாய்ப்புடன் வெளிப்படையனதாக இருத்தல் வேண்டும்.

(உ) அத்தகைய வீதவரிகளும் விதிப்பனவுகளும் சேவைகள் மற்றும் வளங்களை வினைத் திறனாக பயன்படுத்துவதை ஊக்குவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) அத்தகைய வீதவரிகளும் விதிப்பனவுகளும் கொழும்புத் துறைமுகத்தின் நீர் முன் கொள்கலன் முனையங்களின் நிலவுகின்ற காப்புவரிகளுக்கும் மற்றும் சமூக, பொருளாதார மற்றும் சூழல் இலக்குகள் உட்பட பரந்த அரசாங்க கொள்கை குறிக்கோள்களுக்கும் சீரானதாகலாம்.

(3)(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு முன்னர், அமைச்சர், 3 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பெனிகள் மற்றும் வேறு அக்கறை கொண்ட திறத்தவர்களாலும் செய்யப்பட வேண்டிய கருத்துரைக்கென அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் முன் மொழிசெய்யப்பட்ட வீதவரிகளும் விதிப்பனவு களும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஆ) இணையத்தளத்தில் அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு குறையாத காலப்பகுதி யொன்று காலாவதியானதன் மேல், அமைச்சர், அத்தகைய காலப்பகுதியின் போது 3 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பெனிகள் மற்றும் வேறு அக்கறைகொண்ட திறத்தவர்களினால் செய்யப்பட்ட எல்லாச் சமர்ப்பணங்களையும் கருத்திற்கெடுத்தல் வேண்டும்.

(4) அத்தகைய வீதவரிகளையும் விதிப்பனவுகளையும் சேகரிப்பதற்கானதும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்துகையைக் கண்காணிப்பதற்கானதுமான நடவடிக்கைமுறையை அமைச்சர் விதித்துரைத்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி களின் நடைமுறைப்படுத்துகையைக் கண்காணிப்பதற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி பொறுப்பாதல் வேண்டும்.

கொள்கல நிலையத் தொழிற்படுத்து-நர்களுக்கும் பணிப்புக்கள் வழங்குவதற்கான தத்துவம்

**13**. (1) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு உரிமம் பெற்றவரை இணங்கியொழுகச் செய்யும் நோக்கங்களுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி, அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறாகப் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களை அத்தகைய உரிமம்பெற்றவருக்கு எழுத்தில் விடுக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, எழுத்தில், அவர் தேவைப்படுத்தக்கூடிய அத்தகைய படிவத்தில், கொள்கல நிலையத் தொழிற்பாட்டுத் தொழில் தொடர்பிலான விபரத்திட்டுக்களையும், கணக்குகளையும், ஏனைய தகவல் களையும் தனக்குக் கொடுத்துதவும்படி உரிமம் பெற்றவரைப் பணிக்கலாம்.

(3) அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் உரிமம்பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

உட்பிரவேச மற்றும் சோதனைத் தத்துவங்கள்

**14.** பணிப்பாளர் தலைமையதிபதி –

(அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, கொள்கல நிலையத் தொழிற்படுத்துநரின் தொழில் கொண்டுநடாத்தப்படும் வளவுகளினுள் பகலில் அல்லது இரவில் நியாயமான எல்லா நேரங்களிலும் உட்பிரவேசித்து அவற்றைச் சோதனையிடலாம்; அத்துடன்

(ஆ) ஒரு கொள்கல நிலையத் தொழிற்படுத்துநரின் எவையேனும் பதிவேடுகளை மற்றும் அத்தகைய தொழில் தொடர்பான வேறெவை யேனும் பதிவேடுகளைச் சோதனைசெய்து, அவற்றின் பிரதிகளையெடுக்கலாம்.

பதிவேடுகளைப் பேணுதல்

**15**. ஒவ்வோர் உரிமம்பெற்றவரும், விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்

**16**.(1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடு களினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக் கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்கும் பங்கமின்றி, அமைச்சர், பின்வரும் கருமங் களுள் எவை தொடர்பிலும் அல்லது எல்லாம் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிம மொன்றுக்காக விண்ணப்பிக்கின்ற எவரேனு மாளிடமிருந்து தேவைப்பட்ட தகைமைகள்;

(ஆ) ஏதேனும் வகையினதான கடல்சார் கொள் கலத்தைக் களஞ்சியப்படுத்துகின்ற இடத்தின் பொருத்தமாந்தன்மைபற்றிய தேவைப் பாடுகள்;

(இ) உரிமமொன்று எக்காலப்பகுதிக்காகவும் எந் நியதிநிபந்தனைகளுக்கமையவும் வழங்கப் படலாமோ அக்காலப்பகுதியும் அந் நியதி நிபந்தனைகளும்;

(ஈ) உரிமத்துக்கான விண்ணப்பம் எவ்விதத்திலும் எம்முறையிலும் செய்யப்பட்டுத் தீர்மானிக்கப் படலாமோ அவ்விதமும் அம்முறையும்;

(உ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப் பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடிய வாறாகக் கொள்கல நிலையத் தொழிற் படுத்துநரொருவரின் தொழில் தொடர்பான கூற்றுக்களும் வெளிப்படுத்துகைகளும்;

(ஊ) கொள்கல நிலையத் தொழிற்படுத்துந ரொருவரினால் கடைப்பிடிக்கப்படவேண்டிய நியமங்களும் அத்தகைய நியமங்களுக்கு முரணான செயல்களை அல்லது செய்யாமை களைத் தடைசெய்தலும்; அத்துடன்

(எ) உரிமம்பெற்ற கொள்கல நிலையத் தொழிற் படுத்துநர்களினால் விதிக்கப்படவேண்டிய வீதவரிகளினதும் விதிப்பனவுகளினதும் முறையான நடைமுறைப்படுத்துகையைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைமுறை.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டு

மென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளு மன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதியொன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

முற்றுரிமை கொண்டிருத்தல் தவறொன்றா கவுள்ளது

**17**. கொள்கலநிலையத் தொழிற்பாடுத் தொழிலில் தனிப்பட்டமுறையில் அல்லது கூட்டாக முற்றுரிமை கொண்டிருக்கும் உரிமம் பெற்றவரொருவர், தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மீது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்

**18**. இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையான

மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட அல்லது கூட்டிணைக் கப்படாத குழுக் களினால் புரியப்பட்ட தவறுகள் தொடர்பில் குறித்தசில ஆட்களின் பொறுப்பு

**19.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, அப்போது அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருப்பின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அக் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பணிப்பாளர், பொது முகாமையாளர், செயலாளர் அல்லது வேறு ஒத்த அலுவலராகவிருந்த ஆளொவ்வொருவரும் அத்தவறு தான் அறியாமல் அல்லது தனது உட்கையின்றிப் புரியப்பட்டதென்றும், தனது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு தகுந்த எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தாரென்றும் அவர் எண்பித்தாலொழிய, அத்தவறைப் புரிந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்

**20**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய –

“கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்கள்” என்பது, இலங்கையில் கொள்கல முடிவிட, கொள்கல நிலைய மற்றும் கொள்கலக் கேள்வு நிலையத் தொழிற்பாடு என்ற தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பெனி என்று பொருளாகும்;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 43 ஆம் அல்லது 44 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி வணிகக் கப்பற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

“முற்றுரிமை கொண்டிருத்தல்” என்பது, தொழிலின் போது ஆளொருவர், தனியாக அல்லது அவருடன் இணைந்துள்ள ஆட்களினால் பின்பற்றப்பட்ட நடத்தை நெறியுடன் ஒன்றாக

எடுக்கப்படும் போது, கொள்கல நிலையத் தொழிற்படுத்துநர்களின் தொழில் சம்பந்த மாகப் போட்டியை மட்டுப்படுத்துகின்ற, உருத்திரிபுபடுத்துகின்ற அல்லது தடுக்கின்ற பயனைக்கொண்டிருக்கும் அல்லது கொண்டிருப்பதற்கு உட்கருதப்படும் அல்லது கொண்டிருக்கக்கூடிய சாத்தியமுடையதாக விருக்கும் நடத்தை நெறியொன்றைப் பின்பற்றுமிடத்து என்று பொருளாகும்;

“விதித்துரைக்கப்பட்ட” என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித் துரைக்கப்பட்ட என்று பொருளாகும்; அத்துடன்

“பாதுகாப்பு வழிமுறைகள்” என்பது, கொள்கல நிலையத்தின் தொழிற்பாட்டு ஒருமைப் பாட்டை பேணுவதற்கும் கையிருப்புப் பண்டங்களின் பெறுமதியை பாதுகாப் பதற்கும் மற்றும் நிலைய ஆளணியினர் மற்றும் சூழவுள்ள சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமான அத்தியாவசிய மான ஏதேனும் வழிமுறையை உள்ளடக்கும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**21**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது